
# ‘டிஸ்லெக்ஸியா’வின் நம்பிக்கை நட்சத்திரம்

## மெட்ராஸ் டிஸ்லெக்ஸியா அஸோசியேஷன்








**யாத்திரையின் தொடக்கம்**

சில சமயங்களில், வாழ்வில் நிகழும் பின்னடைவே, சில விஷயங்களைப் பற்றிய நமது புரிதலும், எண்ணங்களும், மாறுவதற்குப் பெரிதும் வழி வகுக்கும். சாதிப்பதற்குப் பெரிய தடைக்கல்லாக இருக்கும்' என்று நாம் தீர்மானித்து வைத்திருந்த விஷயங்களை முற்றிலும் புதிய கண்ணோட்டத்தில் நாம் பார்க்கத் தொடங்குவோம். நம்பிக்கையின்மை, நம்பிக்கையாக மாறும்; தன்னம்பிக்கை வாதம், நன்னம்பிக்கை வாதமாகும்.

பழைய கோட்பாடுகளும், கருத்துக்களும் பறந்து சென்று, சரியான சிந்தனை என்னும் ஒளி அவர்கள் மீது பாயும். இது போல், சிந்தனையில் முழு மாற்றம் அடையும் மக்கள் யார்? வாருங்கள், பலரது எண்ண நோக்கையும், புரிதலையும், கற்பிக்கும் முறையையும், வாழ்வு முறையையும், வாழ்க்கைப் போக்கையும் மாற்றிய எம்.டி.ஏ. என செல்லமாக அழைக்கப்படும் 'மெட்ராஸ் டிஸ்லெக்ஸியா அஸோசியேஷன்' ஐத் தொடங்கியவரும் தற்பொழுது அதன் தலைவராகவும் இருக்கும் திரு. டி. சந்திரசேகரை சந்திப்போம்.

எம்.டி.ஏ, 1992ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஒரு இளைஞர், தொலை நோக்கு உள்ள அவரது பெற்றோர்கள், அவரைப் பிரபலமான ஒரு வடிவமைப்பாளராக்க அவர்கள் செய்த போராட்டம் - இவையே எம்.டி.ஏ. உருவானதன் கதை. ஒரு சாதாரணமான, பொதுவான உடல் நிலைக் கோளாறுதான் இது என்ற விழிப்புணர்வை தமது தொலைநோக்குப் பார்வையின் மூலம் புரிய வைத்து, வாழ்க்கையின் பாதை மாறி சென்றிருக்கக்கூடும் பல குழந்தைகளுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் சரியான பாதை வகுத்துத்தந்த திரு. டி. சந்திரசேகர் மற்றும்






அவரது மனைவி திருமதி. சாந்தி தொடங்கி வளர்த்த நிறுவனத்தின் கதை இது. எழுத்தறிவுக் குழப்பம்(டிஸ்லெக்ஸியா), படிப்பறிவுக்கு ஒரு தடைக்கல் என்ற அறியாமை எண்ணத்தால், 'டிஸ்லெக்ஸியா' இருந்த - எனினும், கண்டறியப்படாத - அவர்களது குழந்தைக்கு மூன்று பள்ளிகளில் படிக்க அனுமதி மறுக்கப்பட்டது. படித்தல், மொழி கற்றல் இவற்றில் மிகவும் சிரமப்பட்ட குழந்தையின் பிரச்சனைக்கு யாராலும் தீர்வு காண முடியாததால், பெற்றோர்கள் மிகுந்த கவலையடைந்தனர். எனினும், சவாலை சந்திப்பதற்கு வேறு வழி இருப்பதைக் கண்டறிந்தவுடன், கவலை, மன உறுதியாக மாறியது; சுயபரிசோதனைக்கான நேரம் வந்தது. யதேச்சையாக ஒரு நண்பருடன் நிகழ்ந்த உரையாடலின் விளைவு, 'ஆல்ஃபா டு ஒமேகா' என்னும் பள்ளிக்கு அவர்களைக் கொண்டு சென்றது. 'கற்றலுக்கான ஆற்றலின்மை' (learning difficulties) ஐ அணுகி, தீர்வு கண்டதில் முன்னோடிகளில் ஒருவரான லலிதா ராமானுஜத்தால் நடத்தப்படும் இப்பள்ளியில், வல்லுனர்களால் நடத்தப்பட்ட பயிற்சி அமர்வில், பனித்திரை மெல்ல விலகியது. இங்கு, பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்று கூடி, ஒரு திடமான செயல் திட்டத்தை வகுத்தனர்.

**அமைப்பின் அடுத்த கட்டம்**

சில நாட்களிலேயே, 'ஹேஸல் மேக்காய்' என்ற வல்லுனருடன் நிகழ்ந்த சந்திப்பு அடுத்த கட்டத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றது. 'இந்தியா போன்ற ஒரு மிகப் பெரிய நாட்டில் 'டிஸ்லெக்ஸியா'வால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருக்கும்' என்று அவர் கூறியது, 'ஒன்று அல்லது இரண்டு பெற்றோர்களுடன் சீரமைப்பு நிற்கப் போவதில்லை, இது பெரிய அளவில் நடைபெற வேண்டும்' என்று அவர்களை உணர வைத்தது. எனவே, இதனை சீரமைத்து ஒழுங்குபடுத்துவதே அடுத்த கட்டம். 'டிஸ்லெக்ஸியா' உள்பட கற்றலில் சிரமங்கள் உடைய சுமார் 12 குழந்தைகளின் பெற்றோர்கள் ஒன்று கூடினார்கள்.



### வேகமான வளர்ச்சி

எம்.டி.ஏ. இந்தத் துறையின் முன்னோடிகள் எனும் செய்தி வேகமாகப் பரவியது. இதன் புகழும் பாரெங்கும் பரவியது. நமது நாட்டிலேயே, கொல்கத்தா முதல் திருநெல்வேலி வரை, அனைத்து இடங்களிலிருந்தும் அங்கீகாரமும், பலதரப்பிலிருந்தும் பங்கேற்பும் நடைபெறலாயிற்று. அடையாளங்காணல், மதிப்பீடு, சீரமைப்பு - இவை மூன்றும் அத்தியாவசமானதால், பல இடங்களிலிருந்தும் - குறிப்பாக தொடக்கப் பள்ளிகளிலிருந்து - ஆசிரியர்கள் தருவிக்கப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி நிகழ்வுகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அளிக்கப்படுகின்றன. செலவைக் குறைப்பதற்காக, எம்.டி.ஏ. ஒரே இடத்தில் பல ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் 'மாதிரி' ஐப் பின்பற்றுகிறது. நிறைய பேர் பயன்பெறும்முகமாகவும், விரைவாகச் செயல்படுவதற்காகவும், கணினிகளைப் பயன்படுத்துகிறது எம்.டி.ஏ. சென்னை ஐ.ஐ.டி.யுடன் கூட்டுச் சேர்ந்து, என்.பி.டி.எல். இயங்குதளத்தில் பயிற்சி நிகழ்வுக்ளை நடத்துகிறது. மொத்தம் 25 மணி நேரப் படிப்பு, தொடர்ந்து தேர்வு 8 மாவட்டங்களில் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு 'அடையாளங்காணல், மதிப்பீடு செய்தல், சீரமைத்தல்' என்னும் மூன்று அணுகுமுறைகளிலும், பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் முழு இலக்கு, மீதமுள்ள 25 மாவட்டங்கள்.

### வெற்றி வீரர்கள்

எம்.டி.ஏ. மற்றும் அதன் நிறுவனர் சந்திரசேகர், அவ்வளவாக அறிந்துகொள்ளப்படாத, எனினும் உலகம் முழுதும் வியாபித்து இருக்கும் 'டிஸ்லெக்ஸியா' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள். விழிப்புணர்வு ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான குழந்தைகளைத் தங்களது வெற்றிப்பாதையில் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இது மட்டுமன்றி, கவலையுடன் பயணத்தைத் தொடங்கிய அவர்களது பெற்றோர்களையும் 'டிஸ்லெக்ஸியா' வை ஏற்க வைத்து, அந்த 'ஏற்பை' நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். சமுதாயத்தின் பல மாற்றங்களுள், மனப்பாங்கு மாற்றமே (attitudinal change) மிகவும் கடினமான ஒன்று.

'டிஸ்லெக்ஸியா' தவிர வேறு சில கற்றலில் சிரமங்கள் உடைய குழந்தைகளின் பெற்றோர்களின் குழந்தைகளும் அங்கு இருந்ததால், இவைகளுடன் தொடர்புடைய பிற பிரச்சனைகளும் அங்கு இருந்தன. 'டிஸ்லெக்ஸியா' (இது 'ஏ.டி.எச்.டி' யில் ஒரு வகை) மட்டுமே இருக்கும் குழந்தைகள் சிலரே அங்கு இருந்ததாலும், இதர பிற 'கற்றலுக்கான ஆற்றலின்மை'க்கு சில அமைப்புகள் ஏற்கெனவே இருப்பதாலும், 'டிஸ்லெக்சியா' வில் மட்டுமே முழுக்கவனம் செலுத்துவதற்காக, 'மெட்ராஸ் டிஸ்லெக்சியா' என்னும் புதிய அமைப்பு, தொடங்கப்பட்டது.

### தனித்துறை பயிற்சி

இந்த முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டவுடன், 'பயிற்சி அளிப்பது' அடுத்த கட்ட நடவடிக்கையானது. 'எட்யுகேர்' (Educare) என்னும் சிறப்புக் கல்விக்கான அமைப்பின் நிறுவனரும், சிறந்த கல்வியாளருமான டாக்டர். சுனிதா சோதி, இந்த அமைப்பில் சேர்ந்தார். சேர்ந்தவுடன், சென்னையிலுள்ள சில பிரபலமான பள்ளிகளில், 'வள அறைகள்' (Resource Rooms) அமைத்தார் இவர். பாடத்திட்டத்தை அவ்வளவாக மாற்றாமல், மதிப்பிட்டு, சீரமைப்பதற்காக தொடங்கப்பட்ட இந்த 'அறைகளின்' பொறுப்பாளரானார் சிறப்புக் கல்வியின் இன்னொரு முன்னோடியான நிர்மலா பண்டிட். இத்திட்டம் புரட்சிகரமான ஒன்றாக இருந்தாலும், இது ஒரு குறுகிய காலம் மட்டுமே வெற்றிகரமாக செயல்பட்டது. சிறப்புக் கல்விக்கும் அது தேவைப்படும் குழந்தைகளுக்கும், பள்ளிகள் தயாராகவில்லை.

### அனன்யா - தனித்தன்மை பொருந்திய பள்ளி

எம்.டி.ஏ. தனக்கென ஒரு பள்ளி தொடங்குவதற்கான தருணம் வந்து விட்டது. 'அனன்யா' (இதன் பொருள் 'தனித்தன்மை மிக்க' என்பதாகும்) என்று பெயரிடப்பட்ட இந்தப் பள்ளி, 'டிஸ்லெக்ஸியா' இருக்கும் குழந்தைகளின் மீது முழுக் கவனமும் செலுத்தியது. சீரமைப்பை முக்கிய குறிக்கோளாக கொண்ட இந்தப் பள்ளியில், ஒரு குழந்தை ஒரு வருடம் பயின்றுவிட்டு வேறு பள்ளிக்குச் செல்லலாம். சில வேளைகளில், ஒரு வருடம் என்பது இரண்டு வருடங்களாகவும் ஆகியது. இதனால், மறுபடியும் 'அனன்யா' விற்கே தீர்வுக்காக பெற்றோர்கள் வந்தனர். தேவை காரணமாக கட்டமைப்பு அத்தியாவசியமானது. எனவே, இயற்கையாக வளர்ந்தது 'அனன்யா'. 'என்.ஐ.ஓ.எஸ்' என்னும் முறையினால், குழந்தைகள் தங்களது பள்ளிப்படிப்பை முடிக்க முடிந்தது.




என்று இயங்கும் இந்தப் பயிற்சி, சிறப்புக் கல்வியினை நடத்த விழையும் நபர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. ஒரு லட்சம் ஆசிரியர்கள், பத்து லட்சம் குழந்தைகளுக்கு உதவுவார்கள் என்பதே இதன் பின்னணி மற்றும் குறிக்கோள். தமிழக அரசாங்கமும் இந்த விஷயத்தில் உயிர்ப்புடன் இயங்குகிறது. கடந்த ஒரு வருடத்தில் மட்டுமே, எம்.டி.ஏ. இதனை சாதித்தது மட்டுமன்றி, இன்னும் பலவற்றையும் சாதித்திருக்கிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர்கள் என ஒரு தலைமுறையே, டிஸ்லெக்ஸியா என்னும் நிலையை ஏற்று, புரிந்து, சவாலை சந்திக்க உதவி செய்திருக்கிறது. இது ஒரு அசாதரணமான சாதனையல்லவா!

ராஜேந்திர குமார்